[1971 டிசம்பர் 18

கூட்டுறவு மத்திய வங்கிகள் வழங்கிய கடன்கள்

* 582. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1969-70-ல் கூட்டுறவு மத்திய வங்கிகள் மூலம் தமிழ் நாட்டில் விவசாய அபிவிருத்திக்கு மட்டும் அளிக்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு ?

(இ) அதில் வசூலாகாமலிருக்கும் கடன் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ரூபாய் நாற்பத்திரண்டு கோடியே எழுபத்தி ஆறு லட்சத்து எழுபது ஆயிரம்.

(இ) ரூபாய் மூன்று கோடியே ஒரு லட்சத்து இருபத்து ஏழாயிரம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இப்போது வறட்சி நிலைமை ஏற்பட்டு தற்போதுதான் மழை பெய்திருக்கிறது. ஆகவே, தற்போது வசூலிக்கப்பட்டிருக்கிற கடன் தொகையை 6 மாதம் தள்ளிவைக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : வசூலிக்கப்பட்டிருக்கிற கடன் தொகையைத் தள்ளி வைக்க வேண்டியதில்லை. வசூலிக்கப்படாமல் இருக்கிறகடன் தொகையைத் தள்ளிவைக்க வேண்டுமானால், நான் பல முறை குறிப்பிட்டிருக்கிற வழிமுறையைக் கைப்பற்றினால்போதும்.

திரு. ரா. ரா. முனுசாமி : 1971-72-இல் பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினால் செஞ்சி வட்டத்தில் சம்பா மணிலாப் பயிர் வீணாகிவிட்டது, ஆகவே அந்தப் பகுதியில் கடன் வசூலை ஓராண்டு தள்ளி வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இதைப்பற்றி பலமுறை மன்றத்தில் விளக்கியிருக்கிறேன். ஓராண்டு அல்ல, 3 ஆண்டுகள் தள்ளிவைக்கப்படும். அதற்கு முறைப்படி மனு வரவேண்டும். ரெவின்யூ அதிகாரிகளிடம் இருந்து 6 அணாவுக்குக் குறைவாகத்தான் விளைச்சல் ஏற்பட்டது என்பதாக அணாவாரி சர்டிபிகேட் வாங்கி அனுப்பினால் போதும், கடன் வசூல் தள்ளி வைக்கப்படும்.

Production of grain

* 583 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(a) whether there was a record production of grain for the year 1970-71 in the State ; and

(b) if so, the details thereof?